பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

31 07 2026 FRIDAY 6.30 PM

<u>தலைப்புச் செய்திகள்</u>

1) விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத் திட்டத்தை அடுத்த ஐந்தாண்டுகளுக்கு நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

2) காவல்துறையில் சிறப்பாக பணியாற்றியவர்களுக்கான பதக்கங்களை முதலமைச்சர் திரு விஜய் இன்று சென்னையில் வழங்கினார்.

3) மேகதாது அணையை கட்ட, தமிழக அரசு அனுமதிக்காது என்று வருவாய்த்துறை அமைச்சர் திரு கே ஏ செங்கோட்டையன் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

4) கரூர் உள்ளிட்ட ஐந்து சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தல் அறிவிப்பை வெளியிடுவதற்கான தடையை சென்னை உயர்நீதிமன்றம் அடுத்த மாதம் 24-ஆம் தேதிவரை நீட்டித்துள்ளது.

5) ஆசிய Blitz செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Harika Dronavalli தங்கப்பதக்கம் வென்றார்.

- இனி விரிவான செய்திகள்--

<<<<<<>>>>>

விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத் திட்டத்தை அடுத்த ஐந்தாண்டுகளுக்கு நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், இதற்காக 3 லட்சத்து 15 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இத்திட்டத்தின்கீழ், இதுவரை 4 லட்சத்து 47 ஆயிரம் கோடி ரூபாய் விவசாயிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மாற்றியமைக்கப்பட்ட கேலோ இந்தியா திட்டத்திற்கும் இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக கூறிய அவர், அடுத்த ஐந்தாண்டுகளில் செயல்படுத்தப்பட உள்ள

இந்த திட்டத்திற்காக 36 ஆயிரத்து 441 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தேசிய விளையாட்டு அமைப்புகளுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்திற்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

இதற்கிடையே, விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத் திட்டம் மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது விவசாயிகள் நலனில் மத்திய அரசு அக்கறையுடன் உள்ளதை எடுத்துரைப்பதாக உள்ளது என்று வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், மத்திய அமைச்சரவையின் இந்த முடிவு, விவசாயிகளின் பொருளாதார பாதுகாப்பை மேலும் உறுதி செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

வரலாற்று சிறப்பு மிக்க இந்த முடிவை மேற்கொண்டதற்காக பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

காவல்துறையினருக்கான பதக்கங்களை முதலமைச்சர் திரு விஜய் இன்று சென்னையில் வழங்கினார்.

காவல்துறையில் சிறப்பாக பணியாற்றியவர்களுக்கான குடியரசுத் தலைவர், உள்துறை அமைச்சர் மற்றும் முதலமைச்சரின் விருதுகள் இந்த நிகழ்ச்சியில் வழங்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

காவல்துறையின் சாகச நிகழ்ச்சிகளும் இதில் இடம்பெற்றதாக அவர் மேலும் கூறுகிறார்.

<<<<<<>>>>>

மேகதாது அணையை கட்ட, தமிழக அரசு அனுமதிக்காது என்று வருவாய்த்துறை அமைச்சர் திரு கே ஏ செங்கோட்டையன் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த நிலைப்பாட்டில் முதலமைச்சர் திரு விஜய் உறுதியுடன் உள்ளதாக கூறினார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் தவெக அரசு பொறுப்பேற்ற பின்னர் ஊழல் அற்ற நிர்வாகம் உறுதி செய்யப்பட்டுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு அருண்ராஜ் கூறியுள்ளார்.

கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதன் காரணமாக தொழில் முதலீடுகள் அதிகரிக்கும் என்றார்.

உயர் மருத்துவப்படிப்பிற்கான இடங்களை தவெக அரசுதான் மத்திய அரசுக்கு விட்டுக்கொடுத்துள்ளதாக திமுக தலைவர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளது தவறானது என்றும் திரு அருண்ராஜ் தெளிவுபடுத்தினார்.

<<<<<<>>>>>

உரங்கள் மற்றும் வேளாண் இடுபொருட்களின் விநியோகம் வெளிப்படைத் தன்மையுடன் நடைபெறுவதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்று கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு காந்திராஜ் வலியுறுத்தியுள்ளார்.

இன்று சென்னையில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் செயல்பாடுகள் குறித்து அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.

விவசாயிகளுக்கு சிறந்த சேவைகளை இந்த நிறுவனம் வழங்க வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>

காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது அணை கட்ட கர்நாடக அரசு முயற்சிப்பது கண்டிக்கத்தக்கது என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

சேலம் விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இப்பிரச்சினையில் கர்நாடக முதலமைச்சர் திரு D K சிவகுமார் தெரிவித்துவரும் கருத்துகள் ஏற்புடையது அல்ல என்று கூறினார்.

மேகதாது போன்ற முக்கிய பிரச்சினைகளில் கூட, முதலமைச்சர் திரு விஜய் கருத்துகளை தெரிவிக்காமல் மௌனம் காப்பதாக திரு எடப்பாடி பழனிசாமி குறை கூறினார்.

<<<<<<>>>>>

திருச்சி கிழக்கு, பெருந்துறை, அம்பாசமுத்திரம், விராலிமலை மற்றும் கரூர் சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலுக்கான அறிவிப்பை வெளியிட விதிக்கப்பட்டிருந்த இடைக்கால தடையை அடுத்த மாதம் 24-ஆம் தேதிவரை நீட்டித்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தலைமை நீதிபதி திரு எஸ் ஏ தர்மாதிகாரி, நீதிபதி திரு அருள்முருகன் அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

<<<<<<>>>>>

கோடியக்கரை அருகே நடுக்கடலில் இரண்டு நாட்களாக தத்தளித்த ராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்த ஆறு மீனவர்களை நாகை மீன்வளத்துறையினர் பாதுகாப்பாக மீட்டனர்.

நாட்டுப்படகு பழுதானதன் காரணமாக அந்த மீனவர்கள் நடுக்கடலில் சிக்கியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

திண்டுக்கல் மாவட்டம் செம்பட்டி ஆடுகள் சந்தையில் இன்று ஒரு கோடி ரூபாய் அளவிற்கு ஆடுகள் விற்பனையாயின.

மதுரை, திருச்சி, தேனி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகள் ஆடுகளை வாங்க குவிந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

விழுப்புரம் மாவட்டத்தில் புதிதாக கட்டப்பட்ட அரசு கட்டிடங்களை மாநில அமைச்சர் திரு ஆனந்த் இன்று திறந்துவைத்தார்.

------------------

திருவள்ளூர் மாவட்டம் பழவேற்காடு முகத்துவாரத்தில் மாநில அமைச்சர் திரு ஸ்ரீநாத் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

-----------------

கோவையில் முன்னாள் படை வீரர் அலுவலகத்தில் மாநில அமைச்சர் திரு சரத்குமார் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

-----------------

ராணிப்பேட்டை மாவட்டம் கலவையில் உள்ள தனியார் பொறியியல் கல்லூரியில் போதைப்பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி ஆட்சியர் திருமதி பிரியா ரவிச்சந்திரன் தலைமையில் இன்று நடைபெற்றது.

--------------------

திருவண்ணாமலை மாவட்டத்தில் விவசாயிகள் குறை தீர் கூட்டம் ஆட்சியர் திருமதி வந்தனா கார்க் தலைமையில் இன்று நடைபெற்றது.

-----------------

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலின் தரிசன நேரம் குறைக்கப்படவில்லை என்று கோவில் நிர்வாகம் கூறியுள்ளது.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய Blitz செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Harika Dronavalli தங்கப்பதக்கம் வென்றார்.

Hong Kong-ல் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

----------------

உலக ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

கனடாவின் Ontario-வில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா இப்பதக்கத்தை கைப்பற்றியது.

----------------

தைபே ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Unnati Hooda அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் 23-21, 21-16 என்ற செட் கணக்கில், இந்தியாவின் Devika Sihag -ஐ வென்றார்.

மற்றொரு மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் வெற்றிபெற்று தன்வி சர்மாவும் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்.

----------------

பிலிப்பைன்ஸ் சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Alap Mishra அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 21-16, 21-14 என்ற செட் கணக்கில், பிலிப்பைன்சின் Clarence Villaflor-ஐ வென்றார்.

இந்தியாவின் Ginpaul Sonna, Aryaman Tandon, Pranay Katta ஆகியோரும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

<<<<<<END>>>>>